1990 சனவரி 22]

பெரியார் மாவட்டத்தில் பாரஸ்டு செட்டில்மெண்ட்

*5485. திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டத்தில் உள்ள பாரஸ்டு செட்டில்மெண்ட் எத்தனை ?

(ஆ) இதில் ஆதிவாசிகள் எத்தனை பேர் மலைவாழ் மக்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் ?

(இ) சேர்க்கப்படாமல் உள்ள ஆதிவாசிகளையும் சேர்க்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டத்தில் மொத்தம் 12 பாரஸ்டு செட்டில்மெண்டுகள் உள்ளன.

(ஆ) சத்தியமங்கலம் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் 609 பழங்குடியினர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(இ) சேர்க்கப்படாமல் உள்ள 985 பழங்குடியினரை உறுப்பினர்களாகச் சேர்க்க சங்கத்தின் தனி அலுவலர் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே ஆதிவாசிகள் என்று சொல்லக்கூடிய சமுதாயத்தில் சோழகர், இருளர் என்ற சொல்லக்கூடிய இரண்டு சமுதாயத்தினர் தான் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையில் அந்தப் பகுதியிலுள்ள வனத்தில் உள்ள செட்டில்மெண்ட் பகுதியில் குடியிருக்கிற மக்களில் ஏறத்தாழ 100-க்கு 80 விழுக்காடு பேர் இன்னும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்படாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்து அவர்களையும் உறுப்பினர்களாக விரைவில் சேர்க்க ஆவன செய்வார்களா ? அடுத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஆண்டுதோறும் ஏராளமான இலாபத் தொகை வருகிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரின் முதல் கேள்விக்கு மட்டும் அமைச்சருடைய விடை.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயுள்ள ஆதிவாசிகள் கல்பாசம், கடுக்காய், புங்கம்பருப்பு, பச்சக்காய் போன்ற பொருட்களை மலைகளில் உள்ள காடுகளில் சேகரம் செய்கிற நேரத்தில் வனத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற யானைகளால் தாக்கப்பட்டு பலபேர் இறக்க நேரிடுகிறது. இதனால் மத்திய அரசு ஜனதா இன்சூரன்ஸ் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டுவந்து அதன்படி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய அதிகாரிகளே அந்தத் தொகையினை அரசாங்கத்திற்குக்கட்டி, திடீரென்று உயிரிழப்பு ஏற்படுகின்ற நேரத்தில் தொகை கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அது தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது. இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அவசியம் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய அரசு ஏதாவது மானியம் வழங்குகிறதா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, மானியத் தொகை தற்போது வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரஸ்ட் செட்டில்மெண்ட்டில் உள்ளவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகிற மானியக் கடன்களை அரசு வங்கிகள் வழங்க மறுக்கின்றன. அதேபோல் அரசு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின்படி பாரஸ்ட் செட்டில்மெண்ட் பகுதியில் வீடு கட்டிக் கொடுக்க முடியவில்லை. இந்த இரண்டையும் செய்து கொடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(10-10 மணி)

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.